## September 10, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. குடியரசு துணைத் தலைவர் பதவிக்கு நடத்தப்பட்ட தேர்தலில் பாஜக தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிட்ட சி.பி.ராதாகிருஷ்ணன் (67) 452 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.
    i. 'இண்டி' கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி 300 வாக்குகள் பெற்ற நிலையில், அவரைவிட 152 வாக்குகள் கூடுதலாக சி.பி.ராதாகிருஷ்ணன் பெற்றார்.
    ii. இந்தத் தேர்தலில் வெற்றி பெற குறைந்தபட்சம் 377 வாக்குகளைப் பெற வேண்டும் என்ற நிலையில், பெரும்பான்மையாக 452 வாக்குகள் பெற்ற சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றதாக தேர்தல் அதிகாரியான மாநிலங்களவைச் செயலர் பி.சி.மோடி அறிவித்தார்.
    iii. இதன்மூலம், தமிழகத்தைச் சேர்ந்த சி.பி.ரா தாகிருஷ்ணன் நாட்டின் அடுத்த குடியரசு துணைத் தலைவராவது உறுதியானது.
2. நேபாளத்தில் இளைஞர்களின் போராட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து பிரதமர் பதவியை கே.பி.சர்மா ஒலி ராஜிநாமா செய்தார்.
    i. இளைஞர்களின் வன்முறைப் போராட்டத்தில் நாடாளுமன்றம், உச்சநீதி மன்றத்துக்கு தீவைக்கப்பட்டதால் நாட்டில் பெரும் பதற்றம் நீடித்து வருகிறது.
    ii. நேபாளத்தில் ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் அரசின் பிறநடவடிக்கைகள், சமூக ஊடக தளங்களுக்கு விதிக்கப்பட்ட தடை ஆகியவற்றுக்கு எதிராக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போராட்டத் தில் ஈடுபட்டனர்.
    iii. அப்போது போராட்டக்காரர்கள் மீது காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மாணவர்கள் உள்பட 19 பேர் உயிரிழந்தனர். 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து, சமூக ஊடக தளங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை அரசு நீக்கியது.
    iv. எனினும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பிரதமர் பதவியை கே.பி.சர்மா ஒலி ராஜிநாமா செய்யவும் வலியுறுத்தி ஊரடங்கு உத்தரவை மீறி தலைநகர் காத்மாண்டு மற்றும் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து 2-ஆவது நாளாக இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
3. பிரான்ஸின் புதிய பிரதமராக பாதுகாப்புத் துறை அமைச்சர் செபாஸ்டியன் லெக்கோர்னுவை (39) அந்நாட்டு அதிபர் இமானுவல் மேக்ரான் நியமித்தார்.
    i. முன்னதாக, பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமராக இருந்த பிரான்சுவா பேரூ தோல்வியடைந்தார். இதையடுத்து, புதிய பிரதமராக செபாஸ்டியன் லெக்கோர்னுவை இமானுவல் மேக்ரான் நியமித்தார்.
4. இலங்கையின் முன்னாள் அதிபர்கள் மற்றும் அவர்களது மனைவிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை ரத்து செய்யும் மசோதாவை நாடாளுமன்றத்தில் சிறிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம் என்று அந்த நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
    i. 1986-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் இத்தகைய சலுகைகளை ரத்து செய்யும் மசோதா அரசிதழில் கடந்த ஜூலை மாதம் வெளியிடப்பட்டது. எனினும், இதற்கு எதிராக முன்னாள் அதிபர்கள் மஹிந்தராஜபட்ச மற்றும் கோத்தபய ராஜபட்வின் எஸ்எல்பிபி கட்சி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தது.
    ii. அந்த மனுவை ஆய்வு செய்த நீதிமன்றம், அதை தற்போது நிராகரித்துள்ளது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், முன்னாள் அதிபர்களுக்கு

வழங்கப்படும் அரசினர் மாளிகைகள் மாதாந்திர படித் தொகைகள், அரசுமுறைப் போக்குவரத்து உள்ளிட்ட சலுகைகள் நிறுத்தப்படும்.

iii. தற்போது இலங்கையில் ஐந்து முன்னாள் அதிபர்களும் ஒரு மறைந்த முன்னாள் அதிபரின் மனைவியும் இச்சலுகைகளைப் பெற்றுவருகின்றனர். இது, பொதுமக்களுக்கு நிதிச் சுமையை ஏற்படுவதாக ஆளும் தேசிய மக்கள் சக்தி கட்சி கூறிவருகிறது.

5. நார்வேயில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஜோனாஸ் கார் ஸ்டோரின் தொழிலாளர் கட்சி தலைமையிலான இடதுசாரி கூட்டணி 87 இடங்களைப் பெற்று வெற்றி பெற்றது.
   i. இதையடுத்து, 28 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ள தொழிலாளர் கட்சி, மற்ற நான்கு இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியைத் தொடரும். எதிர்க்கட்சியான கட்சி 24 சதவீத வாக்குகளைப் பெற்று புதிய உச்சத்தை எட்டியுள்ளது.
   ii. இந்தத் தேர்தலில் விலைவாசி, சுகாதாரம், வரி ஆகியவை முக்கிய பிரச்னைகளாக இருந்தன. அவற்றை முன்னிறுத்தி தேர்தல் களம் கண்ட புராகிரஸ் கட்சிக்கு வாக்குகள் அதிகரித்துள்ளது, 'வரலாற்றுச் சிறப்பு மிக்க தேர்தல் முடிவு' என்று அந்தக் கட்சியின் தலைவர் சில்வி லிஸ்ட்ஹாக் பாராட்டியுள்ளார்.

6. தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை அமெரிக்காவில் விற்பனை செய்யாமல் இருந்தால் பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகள் வாழவே முடியாது என்று இந்தியா உள்ளிட்ட நாடுகளை அமெரிக்க அதிபரின் வர்த்தக ஆலோசகர் பீட்டர் நவாரோ விமர்சித்துள்ளார்.
   i. பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகியவை பிரிக்ஸ் கூட்டமைப்பின் பிரதான நாடுகளாகும். இந்த கூட்டமைப்பில் எகிப்து, எத்தியோபியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய நாடுகள் பின்னர் படிப்படியாக இணைந்தன.
   ii. இதில் பிரதான நாடுகளான ரஷியா, இந்தியா, சீனா சமீப நாள்களில் மிகவும் நெருங்கி வருவதை அமெரிக்காவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. முக்கியமாக அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த 50 சதவீத வரிக்குப் பிறகு சீனா, ரஷியாவுடன் இந்தியா நெருக்கத்தை அதிகரித்துள்ளது. இதனால், இந்த நாடுகளை நவாரோ தொடர்ந்து கடுமையாக விமர்சித்துப் பேசி வருகிறது.

7. ஆசியாவின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் இந்தியா சீனா இடையே நட்புறவு வலுப்படுவது, தென்கிழக்கு ஆசிய நாடுகள் (ஆசியான்) கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்குப் பலனளிக்கும் என்று சிங்கப்பூர் வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணையமைச்சர் ஆல்வின் டான் தெரிவித்தார்.
   i. உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சி ஊக்குவிப்பு, சமூக மேம்பாடு, பிராந்திய அமைதி மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட பிராந்திய அமைப்பான 'ஆசியான்'-இல் புரூணே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியத்நாம் ஆகிய 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.
   ii. தென்கிழக்கு ஆசியாவில் மிகப்பெரிய வர்த்தக கூட்டுறவைக் கொண்டுள்ள சீனாவும் 'ஆசியான்' நாடுகளும், ஆழமான ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலியைக் கொண்டுள்ளன. ரயில்வே, துறைமுகங்கள், தொழில் பூங்காக்கள் உள்ளிட்ட உள்கட்டமைப் புத்திட்டங்களில் ஆசியானின் முன்னணி முதலீட்டாளராக சீனா விளங்குகிறது.

iii. சிங்கப்பூர் தனிப்பட்ட முறையில் சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளுடனும் வலுவான உறவைக் கொண்டுள்ளது. இந்தியாவுடன் கடந்த 2005- இல் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை சிங்கப்பூர் மேற்கொண்டது. இரு நாடுகளிடையே 60 ஆண்டுகள் தூதரக உறவும், 20 ஆண்டுகள் விரிவான பொருளாதார ஒத்துழைப்பும் தொடர்வதை நிகழாண்டு குறிக்கிறது.

8. கருவில் உள்ள சிசுவின் பாலினத்தை அறிவதைத் தடை செய்யும் பாலினத் தேர்வு தடைச் சட்ட அமலாக்கத்தை மாநிலங்கள் எந்தஅளவுக்கு கையாண்டு வருகின்றன என்பது குறித்து 4 வாரங்களுக்குள் பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

   i. சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த 2022-ஆம் ஆண்டு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து, 2015, மே 1 முதல் பாலினத் தேர்வு தடைச் சட்டம் தொடர்பாக பதிவான வழக்குகளின் விவரங்களைத் தாக்கல் செய்ய கடந்த 2023-இல் உச்சநீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

9. மேலும் 102 இந்திய கடல் உணவு நிறுவனங்கள் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஐரோப்பிய யூனியன் அனுமதி அளித்துள்ளது.
   i. இத்துடன் சேர்த்து மொத்தம் 604 இந்திய கடல் உணவு நிறுவனங்கள் ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்யும் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இது, கடல் உணவு ஏற்றுமதியில் உலகி லேயே இரண்டாம் இடத்தில் உள்ள இந்தியாவுக்கு ஏற்றுமதியில் 20 சதவீதம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.
   ii. கடந்த 2023-24-ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய யூனியனுக்கு இந்திய கடல் உணவு ஏற்று மதி 1.1 பில்லியன் டாலராக (சுமார் ரூ.9,705 கோடி) இருந்தது. அதே வேளையில், 2024-25- ஆம் ஆண்டில் இறால் ஏற்றுமதி மட்டும் 4.88 பில்லியன் டாலருக்கு (சுமார் ரூ.42,350 கோடி) நடைபெற்றுள்ளது. இது மொத்த கடல் உணவு ஏற்றுமதியில் 66 சதவீதமாகும்.
   iii. அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால் பாதிக்கப்பட்டிருந்த இறால் ஏற்றுமதியும், ஐரோப்பிய யூனியன் அனுமதியால் பலனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   iv. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், சீனா, ஜப்பான், வியத்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குப் பெரும்பாலான கடல் உணவு ஏற்றுமதியை இந்தியா மேற்கொண்டுள்ளது.

10. இங்கிலாந்தில் நடைபெறும் உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப்பில், இந்திய வீராங்கனை நிகாத் ஜரீன் காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.